# விலங்குகள்

எமக்கு இயற்கை கொடுத்த கொடை விலங்குகளாகும். விலங்குகளில் காட்டு விலங்குகள், வீட்டுவிலங்குகள் என இரு வகை உண்டு. புலி, சிங்கம், கரடி, யானை போன்றவை காட்டுவிலங்குகள் எனவும் ஆ, ஆடு, நாய், பூனை போன்றவை வீட்டு விலங்குகள் என்றும் கூறப்படுகின்றன. ஆவிலிருந்து பால், சாணம் என்பன கிடைக்கின்றன. குதிரை, மாடு போன்றவை வண்டி இழுக்கப் பயன்படுகின்றன. யானை பளுவான பொருட்களைத் தூக்குவதற்குப் பயன்படுகிறது. மேலும் ஆடு, மாடு, பன்றி போன்றவை இறைச்சிக்காகப் பயன்படுகின்றன. ஆபிரிக்காவில் பல விலங்ககங்கள் உள்ளன. ஆபிரிக்கக்காடுகளில் விந்தையான விலங்குகளைக் கூடுதலாகக் காணலாம். இவ் விலங்குகளில் புலி தமிழரது வரலாற்றில் சிறப்பிடம் பெறுகின்றது. மூவேந்தர்களில் சோழரது கொடி புலிக்கொடியாகும்.